# முயற்சியாண்மைக்கல்வி

## 04

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

## முயற்சியாண்மையும் சிற்றளவு வணிகமும்

## தரம் 10

**மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

1. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சிறு வணிகங்களின் பங்களிப்பிற்க்கு வழங்கப்படும் ஒரு காரணியாக அமைவது?

    1. சந்தை வரையறுக்கப்பட்டிருத்தல்
    2. தேசிய உற்பத்தியை அதிகரித்தல்
    3. நவீன தொழிலில்நுட்பம் பயன்படத்தப்படாமை
    4. போட்டியை எதிர்கொள்வதில் சிரமம்

2. சிற்றளவு வணிகத்தின் பண்பாக அமைவது?

    1. பொது உரிமை காணப்படல்
    2. குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களைக் கொண்டிருத்தல்
    3. பாரிய முதலீடு காணப்படல்
    4. வணிகம் நடவடிக்கைகள் பெரிய பரப்பளவில் பரவிகாணப்படல்

3. கீழே உள்ள வாக்கியத்தில் இருந்து சரியான வாக்கியத்தை தேர்ந்தெடுக்கவும்

    1. பாரிய அளவிலான வணிகங்களில் இருந்து பல புதிய கண்டுபிடிப்புக்கள் வந்துள்ளன
    2. சந்தை இடைவெளி என்பது வாடிக்கையாளர் தேவைகளை ஏற்கனவே பூர்த்தி செய்த பிரிவாகும்
    3. வெற்றிகரமான வணிகங்களின் தொடக்கப் புள்ளி ஒரு சிறு வணிகமாகும்
    4. பெரும்பாலான பாரிய வணிகங்கள் ஒரு சிறிய பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்ட வணிக நடவடிக்கைகளை கொண்டுள்ளன

4. அரவிந்த ஒரு வணிகத்தின் உரிமையாளராக அமைவதுடன் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் காணப்படுகின்றார் .வணிகத்திற்கான ஒட்டுமொத்த திட்டத்தை வகுத்தார். இந் நிகழ்வு உள்ளடங்குவது

    1. தலைவரின் வகிபங்கிற்கு
    2. முகாமையாளர் வகிபங்கிற்கு
    3. உரிமையாளர் வகிபங்கிற்கு
    4. தலைமை நிர்வாக அதிகாரி வகிபங்கிற்கு

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

5. பின்வரும் எந்த வணிகமானது வாடிக்கையாளருக்கும் உரிமையாளர்க்கும் இடையே சிறந்த உறவைக் கொண்டுள்ளது?

1. பாரிய அளவிலான வணிகம்
2. அங்கீகார வணிகம்
3. சிற்றளவு வணிகம்
4. வறையறுக்கப்பட்ட கம்பனி

6. ஒரு முயற்சியாளர் தனது அணியை இலக்குகளை நோக்கி அழைத்துச் செல்வதன் மூலம் சாதிக்கிறார்

1. தலைவரின் வகிபங்கு
2. முகமையாளர் வகிபங்கு
3. உரிமையளர் வகிபங்கு
4. முதலீட்டாளர் வகிபங்கு

7. முயற்சியாளர் வணிகத்திற்கு தேவையான வளங்களை வழங்குவதன் மூலம் சாதிக்கிறார்

1. தலைவரின் வகிபங்கு
2. முகமையாளர் வகிபங்கு
3. உரிமையளர் வகிபங்கு
4. முதலீட்டாளர் வகிபங்கு

8. வணிகத்திற்கு மூலதனத்தை வழங்கும் நபர் அழைக்கப்படுவது

1. உரிமையாளராக
2. முகாமையாளராக
3. வங்கியாளராக
4. ஊழியராக

9. முகாமையாளர் வகிபங்கிற்கு உரிய ஒரு செயற்பாடு

1. உபகரணங்களை கொள்வனவு
2. வணிக திட்டமிடல்
3. ஊழியர்களை ஊக்கப்படுத்தல்
4. ஊழியர்களின் சம்பளம் வழங்கல்

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

10. பின்வரும் செயற்பாடுகளில் இருந்து உரிமையாளரின் வகிபங்கிற்குரிய பணிகளை மட்டும் கொண்ட பதிலை தேர்ந்தெடுக்கவும்

1. திட்டங்களை உருவாக்குதல், ஊழியர்களை ஊக்கப்படுத்தல்,ஊழியர்களை வழிநடத்துதல்
2. வளங்களை வழங்கல்∵இடர் அபாயங்களை ஏற்றல்∵முக்கியமான முடிவுகளை எடுத்தல்.
3. ஊழியர்களுக்கு வழிகாட்டுதல்∵திட்டங்களை பின்பற்றுதல்∵இலாப நட்டங்களை ஏற்றல்
4. வளங்களை வழங்குதல்,திட்டங்களை உருவாகுதல்∵ஊழியர்களை ஊக்கப்படுத்தல்

11. வணிகம் தொடர்பான முகாமையாளரின் வகிபங்குடன் தொடர்புடைய பணிகளை மட்டும் உள்ளடக்கிய பதிலை தேர்ந்தெடுக்கவும்

1. திட்டங்களை தயாரித்தல்∵வளங்களை வழங்குதல்∵திட்டங்களை செயல்படுத்தல்
2. திட்டங்களை தயாரித்தல்∵வளங்களை வழங்குதல்∵ஊழியர்க்கு வழிகட்டல்
3. திட்டங்களை தயாரித்தல்∵வளங்களை வழங்குதல்∵வளங்களை நிர்வாகித்தல்
4. திட்டங்களை தயாரித்தல்∵வளங்களை நிர்வாகித்தல்∵திட்டங்களை செயல்படுத்துதல்

12. வணிகத்தின் மனித மற்றும் பௌதீக வளங்களை வழிநடத்துவதன் மூலம் நிறுவனத்தின் குறிக்கொள் மற்றும் நோக்கங்களை அடைய தலைமைத்துவத்தை வழங்குபவர்கள்

1. உரிமையாளர்கள்
2. முகாமையாளர்கள்
3. தலைவர்கள்
4. ஆலோசகர்கள்

13. புதிய தயாரிப்புகளை உருவாக்குவது முயற்சியாளர்களை சார்ந்த

1. மானிடத்திறன்
2. ஒரு தொழில்நுட்ப திறன்
3. ஒரு தகவல் தொடர்பு திறன்
4. எண்ணக்கரு ரீதியான திறன்

14. கூட்டங்களை நடத்துதல்,தகவல்களை பரிமாறுதல்,தொடர்புடைய அறிக்கைகள் மற்றும் தகவல்களை ஆர்வமுள்ள தரப்பினருக்கு பகிர்ந்தளித்தல் என்பன முயற்சியாளருக்கு உரிய சொந்தமானது,

1. ஆலோசனை திறனாகும்
2. தொடர்பாடல் திறனாகும்
3. எண்ணக்கரு ரீதியான திறனாகும்

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

4. மானிடத் திறனாகும்

15.முயற்சியாண்மையின் ஒரு திறனால் கருதப்படாதது

1. மானிடத்திறன்
2. குழுக்களுடன் செயற்படும் திறன்
3. சந்தைப்படுத்தல் திறன்
4. தொடர்பாடல் திறன்

**(1) பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

1.சிற்றளவு வணிகம் என்றால் என்ன?

2..சிற்றளவு வணிகத்தின் 4 பண்புகளை தருக

3..சிற்றளவு வணிகத்திற்கும் முயற்சியாளர்க்கும் இடையிலான தொடர்பை விளக்குக

4..சிற்றளவு வணிகங்கள் பொருளாதார வளர்சிக்கு 4 பங்களிக்கும் வழிகளை குறிப்பிடுக

5..சிற்றளவு வணிகங்களின் 4 வரையறைகளை தருக

6..சிற்றளவு வணிகங்களின் 4 நன்மைகளை தருக

7..சிற்றளவு வணிகத்தை வெற்றியடைய செய்ய மெற்கொள்ள வேண்டிய 4 நடவடிக்கைகளை குறிப்பிடுக

8.முயற்சியாளரின் 3 வகிங்குகளை குறிப்பிடுக

9.முயற்சியாளர் ஒருவர் கொள்ள வேண்டிய 4 அடிப்படை திறன்களை குறிப்பிடுக

10. முயற்சியாளருக்கு எண்ணக்கரு ரீதியான திறன் ஏன் முக்கியம்

COMMERCE & BUSINESS STUDIES BRANCH